# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**54.0**

2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 0.3 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

2020 சனவரியில் தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மெதுவான வேகத்தில் விரிவடைந்து 54.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தமைக்கு புதிய கட்டளைகளிலும் கொள்வனவு இருப்புக்களிலும் காணப்பட்ட மெதுவான விரிவாக்கமே முக்கிய காரணமாகும்.

குறிப்பாக உணவுத் தயாரிப்பு மற்றும் குடிபானத் துறையில் புதிய கட்டளைகள், உற்பத்தி மற்றும் கொள்வனவு இருப்பு துணைச் சுட்டெண்கள் மெதுவான வேகத்தில் விரிவடைந்தமைக்கு பண்டிகைக் காலத்திற்குப்பின்னர் கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். மேலும், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையின் கொள்வனவுகளின் இருப்புக்கள் மெதுவடைந்தமைக்கு சீனப் புத்தாண்டு விடுமுறைகள் காரணமாயமைந்தன. ஊழியர்கள் உயர்ந்த கொடுப்பனவுகளைக் கொண்ட தொழில்களைப் பெறுவதற்காக தமது தற்போதைய தொழில்களை விட்டுச்சென்றமையின் காரணமாக இம்மாதகாலப்பகுதியில் தொழில்நிலை சுருக்கமடைந்தது.


அதேவேளை, குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள், தயாரிப்புத் துறையின் நிரம்பலர் விநியோக நேரம் கணிசமானளவிற்கு நீண்டு காணப்பட்டது. நிரம்பலர் விநியோக நேரம் நீண்டு செல்வது வழமையாக, விரிவடைந்த தயாரிப்பு நடவடிக்கைகளின் காரணமாக மூலப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியை எடுத்துக்காட்டுகின்ற போதும் 2020 சனவரி தொடக்கத்தில் கொரோனா வைரஸ் நோய் (கொவிட் - 19) சீனாவில் பரவியமையே இத்தாக்கத்திற்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது. மேலும், இத்துறையிலுள்ள பதிலிறுப்பாளர் சீனாவிலிருந்தான மூலப்பொருட்களுக்கான அவர்களின் இறக்குமதிக் கட்டளைகள் இதே காரணத்திற்காக காலவரையறையின்றி தாமதமாவதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

| மாறி | திசெ 2019 | சன. 2020 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.3** | **54.0** | - | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 56.5 | 54.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 56.0 | 54.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.0 | 49.5 | - | அதிகரிப்பிலிருந்து குறைவடைகிறது |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.5 | 50.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 50.0 | 61.5 | - | நீண்டு செல்லல், உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொழில் நிலை தவிர்ந்த, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் தொடக்க மட்டமான 50.0 (நடுநிலையான) அளவினை விஞ்சி 2020 சனவரி மாத காலப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தின.

புதிய கொரோனா வைரஸ் நோயின் பரவல் உலகளாவிய வழங்கல் சங்கிலிக்கு இடையூறாக அமையுமென குறிப்பாக ஆடைத் துறையுடன் தொடர்பான தயாரிப்பாளர்கள் எச்சரிக்கை விடுக்கின்ற போதும் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்ப்புக்கள் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவில் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

2020 சனவரியில் உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 50.4 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. இது 2019 திசெம்பரிலிருந்து 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றாகக் காணப்படுகிறது.

2020 சனவரியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா என்பனவற்றின் தயாரிப்பு கொ.மு.சு மெதுவடைந்த வேளையில் இந்தியா, ஐக்கிய இராச்சியம், யூரோ வலையம், சிங்கப்பூர் மற்றும் ருஷியா வலயங்களின் அச்சுட்டெண் மேம்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], பெப்புருவரி 13, 2020 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2020 சனவரியில் பணிகள் துறை மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தமைக்கு,** புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கை, தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கமே ஆதரவாக அமைந்தது.

சுற்றுலாவின் உச்சமட்ட பருவகாலம், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக்குறைப்பு என்பனவற்றின் காரணமாக தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணை நடவடிக்கைகளின் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. மேலும், நிதியியல் பணிகள், போக்குவரத்து மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் ஆகிய துணைத் துறைகளின் வியாபார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. எனினும், 2020 சனவரியில் நடவடிக்கை மட்டங்கள் 2019 திசெம்பரில் நிலவிய பருவகால உயர்ந்த நடவடிக்கை மட்டங்களிலும் பார்க்க மெதுவான வேகத்தில் விரிவடைந்தன.

அதேவேளை, ஆண்டின் தொடக்கத்தில் புதிய ஆட்சேர்ப்புக்களின் காரணமாக ஒன்பது மாதங்களாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2020 சனவரியில் தொழில்நிலை அதிகரித்தது. தொழில்நிலையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பும் 2020 சனவரியில் நிலுவையிலுள்ள வேலைகள் குறைவடைவதற்குப் பங்களித்தது.

மேலும், புதிய கொரோனா வைரஸ் பரவலின் தாக்கம் காரணமாக சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் கப்பற்படுத்தல் என்பனவற்றில் வீழ்ச்சி ஏற்படும் என்பதனால் தங்குமிடவசதி, உணவு, குடிபானம் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளின் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு 2020 சனவரியில் தளர்வடைந்தது.


| மாறி | திசெ 2019 | சன. 2020 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **60.2** | **57.0** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 63.0 | 60.4 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 67.8 | 61.4 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.0 | 52.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கிறது |
| நிலுவையிலுள்ள பணிகள் | 50.0 | 44.1 | - | நடுநிலையிலிருந்து குறைவடைகிறது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 73.3 | 66.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**57.0**

2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 3.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

2020 சனவரியில் உலகளாவிய பணிகள் கொ.மு.சுட்டெண் 2019 திசெம்பரில் 52.0 சதவீதத்திலிருந்து 52.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான் மற்றும் சீனா என்பனவற்றின் கொ.மு.சு பணிகள் 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் அவற்றின் பணிகள் துறைகள் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], பெப்புருவரி 13, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.